**இயக்குநர் (மு.கூ.பொ) மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சி துறை,3ம் தளம், குறளகம், சென்னை -108 அவர்களின் செயல்முறை ஆணைகள்**

**முன்னிலை : திரு. மு. மனோகரன், எம்.எஸ்ஸி., பி.எட்.,**
**இயக்குநர் (மு.கூ.பொ)**

**செயல்முறை ஆணைகள் எண்.241/மசெஆது/அ3/2019, நாள்** 01.06.2020

பொருள்: பணியமைப்பு – மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை - தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் – பணி நியமனம் (நேரடி) – 2015-16, 2016-17 மற்றும் 2017-18ம் ஆண்டிற்கான ஒருங்கிணைந்த குடியியல் பணித் தேர்வு IV-ல் அடங்கிய இளநிலை உதவியாளர் பதவி – தமிழ்நாடு அமைச்சுப் பணித் தொகுதி – திருமதி க. சரளா, இளநிலை உதவியாளர் பணி வரன்முறை செய்து ஆணை வெளியிடல் சார்பாக.

பார்வை: 1. செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை. கடித எண்.1359/PSD-G1/ 2019/ நாள் 15.02.2019.
2. இவ்வலுவலக செயல்முறை ஆணைகள் எண் 241/ மசெஆது / அ3/2019, நாள் 21.02.2020.

****

பார்வை 1ல் காணும் கடிதத்தில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் 2015-16, 2016-17 மற்றும் 2017-18ம் ஆண்டிற்கு ஒருங்கிணைந்த குடியியல் பணித் தேர்வு தொகுதி IV-ல் அடங்கிய இளநிலை உதவியாளர் பதவிக்கு தெரிவு செய்யப்பட்டு இத்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட திருமதி க.சரளா (பிறந்த தேதி 15.04.1983) அவர்களை இவ்லுவலகத்தில் காலியாக இருந்த இளநிலை உதவியாளர் பணியிடத்தில் ரூ.19500-62000 (Level-8) என்ற ஊதிய விகிதத்தில் பணி நியமனம் செய்து பார்வை 2ல் காணும் இவ்வலுவலக செயல்முறை ஆணையில் ஆணை வழங்கப்பட்டதைத் தொடர்ந்து திருமதி க.சரளா, 06.03.2019 மு.ப. முதல் இளநிலை உதவியாளராகப் பணியாற்றிவருகிறார்.

2. திருமதி க. சரளா, இளநிலை உதவியாளர் பதவியில் 05.03.2020 பி.ப. வரை ஓராண்டு காலம் நிறைவு பெற்றதைத் தொடர்ந்து விதிகளின்படி மேற்படி தனியரை 06.03.2019 மு.ப. முதல் இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன் முறை செய்து ஆணை வெளியிடப்படுகிறது.

3. இவருக்கு பணிவரன்முறை செய்யப்பட்ட நாளான 06.03.2019 மு.ப. முதல் ஈராண்டு காலம் தகுதிகாண் பருவம் துவங்கப்பட்டுள்ளது. ஈராண்டு கால தகுதிகாண் பருவத்தை தனியர் மூன்றாண்டு தொடர் பணிக் காலத்திற்குள் முடிக்க வேண்டும் என ஆணையிடப்படுகிறது.

மு. மனோகரன்,
இயக்குநர் (மு.கூ.பொ).

பெறுநர்
திருமதி க. சரளா.
இளநிலை உதவியாளர், ம.செ.ஆ.துறை, சென்னை -108.

/ உத்தரவுப்படி அனுப்பப்படுகிறது /

துணை இயக்குநர் (நிர்).

3.6.2020